தேதி : 21.05.2026

Spl.C.C. : 1/2022

PW. : 3

பெயர் : **திரு.கணபதி**.

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21st May 2026.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

*(சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)*

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் இந்த வழக்கில் சாட்சியாக இருப்பதற்கு எனது மேல் அதிகாரியிடமிருந்து எழுத்துமூலமான உத்தரவு வாங்கினேனா என்றால் ஆமாம். அந்த உத்தரவை போலிசாரிடம் நான் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக மொத்தம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் சுமார் பன்னிரெண்டு கையொப்பங்கள் செய்தேன்.

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.21 13:13:48 +0530

ஒப்படைப்பு மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் புகார்தாரர் சொன்ன விபரங்கள் எழுதப்பட்டிருந்தது.

2. அன்றைய தினம் நான் சம்பவ இடம் சென்ற அரசு வாகனத்தின் எண் என்ன என்றால் தெரியாது. கிராம நிர்வாக அலுவலகம் இளையாங்குடியில் எந்த தெருவில் உள்ளது என்றால் பாரதியார் தெருவில் உள்ளது. அது இளையாங்குடி கம்மாய் கரையிலிருந்து எந்த திசையில் உள்ளது என்றால் வடகிழக்கு திசையில் உள்ளது. கிராம நிர்வாக அலுவலகம் பூட்டப்பட்டிருந்த நிலையில் புகார்தாரர் எந்த எண்ணிலிருந்து எதிரியை தொடர்பு கொண்டார் என்றால் புகார்தாரர் அவரது கைப்பேசியிலிருந்து தொடர்பு கொண்டார். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

3. நான் சொல்வதுபோல் ஆஜர் எதிரி பணம் ரூ.4000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று புகார்தாரர் கருணாகரனிடம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் சம்பந்தமாகத்தான் லஞ்சம் கேட்டதாக வழக்கு என்றால் சரிதான். எதிரிக்கு பின்பு வந்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் துறையினர் புகார்தாரரின் பட்டா மனுவினை தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.21 13:13:53 +0530

என்றால் தெரியாது. எதிரி புகார்தாரரின் பட்டா கோரும் மனுவினை பரிந்துரை செய்ய மறுத்த காரணத்தினால் எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றாலும், எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக எதிரியின் சட்டைப்பையில் கருணாகரன் லஞ்சப்பணத்தை திடீரென வைத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, சாட்சி மீண்டும் மாற்றி எதிரிதான் பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா என கேட்டு லஞ்சப்பணத்தை வாங்கி அவரது சட்டைப்பையில் வைத்துக்கொண்டார் என்று கூறுகிறார்.

4. புகார்தாரரிடமிருந்து லஞ்சப் பணத்தை வாங்கி ஆஜர்எதிரி எண்ணிப்பார்த்தாரா என்றால் இல்லை, வாங்கியவுடன் சட்டைப்பையில் வைத்துவிட்டார். காவல் ஆய்வாளரைத்தவிர எத்தனை போலிசார் உடன் வந்தார்கள் என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பேருந்து நிறுத்தம் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் கடைகள் இருக்கின்றன என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்து இரசாயன பரிசோதனை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். இரசாயன பரிசோதனை செய்த கரைசலை கண்ணாடி பாட்டிலில் ஊற்றி, நூல் சுற்றி, V and AC சீல்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.21 13:13:59 +0530

வைத்து, லேபிள் ஒட்டினார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். V and AC சீல் வைத்து, லேபிள் ஒட்டி, அந்த லேபிளில் என்ன எழுதினார்கள் என்றால் குற்ற எண், வலது கை கரைசல், இடது கை கரைசல் என்று குறிப்பு செய்யப்பட்டது. நான் சொல்வதுபோல் கிராம நிர்வாக அலுவலகத்தில் வைத்து எந்த பரிசோதனையும் நடைபெறவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்துதான் என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

5. காவல் ஆய்வாளர் சட்டைப்பையிலிருந்து பணத்தை எடுக்க சொன்னதன்பேரில்தான் ஆஜர் எதிரி பணத்தை எடுத்து கொடுத்தாரா என்றால் புகார்தாரரிடம் வாங்கிய பணம் எங்கே என்று எதிரியிடம் ஆய்வாளர் கேட்டபோது எதிரி பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். புகார்தாரரிடம் வாங்கிய பணம் எங்கே என்று போலிசார் கேட்கவில்லை என்றாலும் எதிரியை மிரட்டி அவரது கையால் பணத்தை எடுக்கச் சொன்னதால்தான் அவர் பணத்தை எடுத்தார் என்றால் சரியல்ல.

6. ஆஜர் எதிரிக்கு மாற்று உடை எங்கிருந்து எடுத்து கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் மாற்று உடை கொடுத்தார்கள். ஆஜர் எதிரி அவரது கப்போடிலிருந்து 11

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.21 13:14:05 +0530

ஆவணங்கள் எடுத்து கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த ஆவணங்கள் என்னென்ன என்றால் 11 ஆவணங்கள் என்பது நினைவிலிருக்கிறது, என்ன ஆவணங்கள் என்று தற்சமயம் ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் என் முன்னிலையில் எந்த ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் எதிரியிடம் கேட்டபோது, நான் பணம் எதுவும் கேட்கவில்லை, அவராகத்தான் கொடுத்தார் என்று எதிரி சொன்னதாக நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

7. கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் கைப்பற்றப்பட்ட பணம் குறித்து, சோதனை குறித்தும், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் குறித்தும் கைப்பற்றுதல் மகஜரில் எழுதப்பட்டிருந்தது. பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் சம்பவ இடத்தினை பற்றியும், சம்பவ இடத்தினை குறித்த வரைபடமும் இருந்தது, அதற்கு மேல் அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல், சொன்ன இடத்தில் வைத்து எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் அனைத்து ஆவணங்களிலும் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.21 13:14:18 +0530

எதிரி வாதியிடம் லஞ்சப்பணம் எதுவும் கேட்கவில்லை என்றாலும், நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.21 13:14:24 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.